## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| | | |
|---|---|---|
| **M.C.O.P. No. 4/2019** | **Date :19.10.2022.** | **PW1** |
| Name: விஜயகுமார் | த/பெ.மாதுபிள்ளை | |
| Evidence Recorded Time: 03.16 P.M. to 03.20 P.M. | | |

**<u>3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

25.06.2017–ம் தேதியில் விபத்து நடைபெற்றது. நான் மேச்சேரிக்கு எனது வேலையின் காரணமாக சென்றிருந்தேன். நான் வெல்டிங்க் வேலை செய்துவருகிறேன். நான் சொந்தமாக வெல்டிங்க் வேலை செய்கிறேன். வேலை இல்லாத சமயத்தில் வீட்டில்தான் இருப்பேன். மாதம் எனக்கு நிரந்தர வருமானம் இவ்வாளவு தான் என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்றால் நான் மேச்சேரியிலிருந்து மேட்டூர் வந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த வண்டி இடித்து இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தின் போது நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து காலத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல என்னிடம் இருந்தது அந்த சமயத்தில் நான் வீட்டில் வைத்திருந்தேன். நான் தலைக்கவசம் அணியாத காரணத்தினால் இந்த விபத்து ஏற்பட்டு தலையில் அடிபட்டது என்றாலும் என்னுடைய அஜாக்கரதையால்தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. எதிரே வந்து வண்டி மோதவில்லை என்றாலும் பின்புறம்தான் வண்டி மோதியது என்றாலும் சரியல்ல. நான் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. தற்போது நான் வீட்டில்தான் இருந்து வருகிறேன். நான் கோரியிருக்கும் இழப்பீட்டு தொகையானது அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.